## சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – 2010–2011ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் இணை உணவு வழங்குதல் – கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட சந7(1)துறை

அரசு ஆணை (நிலை) எண்.02

நாள் .03.01.2011.
திருவள்ளுவர் ஆண்டு 2041
மார்கழி 19

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.146, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, நாள் 16.10.2006.

2. மத்திய அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் கடிதம் எப்–எண்.5/9–05/ND/Tech(Vol-II), நாள் 24.02.2009.

3. அரசு கடிதம் எண்.17156/சந7(1)/09–2, நாள் 06.01.2010.

4. அரசாணை (நிலை) எண்.34, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந7(1)) துறை, நாள் 17.2.2010.

5. முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் கடிதம் எண்.2130/என்சி1(2)/2010, நாள் 17.05.2010.

6. முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் கடிதம் எண்.2130/என்சி1(2)/2010, நாள் 05.08.2010.

+++++

**ஆணை :**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் இணை உணவின் கலவை அளவு,

இணை உணவு கொள்முதல் செய்யும் விதம், இணை உணவு தயாரித்து வழங்க தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களின் கடமைகள், அவைகள் பெற்றிருக்க வேண்டிய தொழில் நுட்ப வசதி, ஒப்பந்தம் கோரி, இறுதி செய்வதற்கான நடைமுறைகள் குறித்து விவரமான ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே 2ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மத்திய அரசு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இணை உணவில் இருக்க வேண்டிய புரதச்சத்து, கலோரி மற்றும் வைட்டமின் ஆகியவற்றின் அளவையும், இதற்கான நிதிச் செலவின அளவையும், உச்சநீதி மன்றத்தின் ஆணைப்படி, கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது:-

| வகை | ஒரு பயனாளிக்கு ஒரு நாளுக்கான ஊட்டச்சத்து அளவு | | | ஒரு பயனாளிக்கு ஒரு நாளுக்கான செலவின அளவு |
|---|---|---|---|---|
| | புரதச்சத்து (கிராம்) | கலோரி | வைட்டமின் மற்றும் தாதுப்பொருட்கள் (உணவில் சதவிகிதமாக) | |
| 6லிருந்து 72 மாதங்கள் வரையிலான குழந்தைகள் | 12–15 | 500 | 50% | ரூ.4.00 |
| 6 லிருந்து 72 மாதங்கள் வரை கடும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் | 20–25 | 800 | 50% | ரூ.6.00 |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 18–20 | 600 | 50% | ரூ.5.00 |

3. உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி, மைய அரசால் மேற்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்ட இணை உணவின் அளவீடுகளை உடனடியாக அமல்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு, ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த இணை உணவின் (சத்துமாவு) அளவு, 20.5.2009 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டது:-

| வகை | ஒரு பயனாளிக்கு ஒரு நாளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த இணை உணவின் அளவு (கிராமில்) | ஒரு பயனாளிக்கு ஒரு நாளுக்கான செலவின அளவு | ஒரு பயனாளிக்கு ஒரு நாளுக்கான மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட செலவின அளவு | திருத்திய நிதி செலவின அளவிற்குள் 20.5.2009 முதல் வழங்கப்பட்டு வரும் இணை உணவு (கிராமில்) |
|---|---|---|---|---|
| 6லிருந்து 36 மாதங்கள் வரையிலான குழந்தைகள் | 100 | ரூ.3.10 | ரூ.4.00 | 130 |
| 6 லிருந்து 36 மாதங்கள் வரையிலான குழந்தைகள் (கடும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள்) | 100 | ரூ.3.10 | ரூ.6.00 | 190 |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 100 | ரூ.3.10 | ரூ.5.00 | 160 |

4. மேலே 4ல் படிக்கப்பட்ட அரசாணையில் மைய அரசின் திருத்தப்பட்ட அளவீடுகள்படி, 20.5.2009 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட இணை உணவிற்கான கூடுதல் செலவினமாக ரூ.61.35 கோடி நிதியை ஒதுக்கீடு செய்தும், 2010 முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தனியார் நிறுவனங்களிடமிருந்து, இணை உணவு மற்றும் இணை உணவு தயாரிக்கும் 25 மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்களுக்கு இணை உணவு தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்களின் கலவை ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோர, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

5. 2010 ஏப்ரல் மாதம் வரை நடைமுறையில் இருந்த முந்தைய ஒப்பந்தத்தின்படி, 25 கூட்டுறவு சங்கங்களிடமிருந்து போக்குவரத்து செலவினம் உட்பட ஒரு மெட்ரிக் டன் இணை உணவு ரூ.30,990/- விலையில் கொள்முதல் செய்யப்பட்டது என்றும், மேற்படி ஒப்பந்தம் ஏப்ரல், 2010ல் முடிவடைந்ததால், அரசாணை (நிலை) எண் 34, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 17.02.2010ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி இணை உணவு கொள்முதல் செய்வதற்காக புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முடிவு செய்யப்பட்டது என்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், அவ்வாறு முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின்படி, கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களுக்கு அட்டவணையில்

கண்டுள்ள விலைகளின் படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையரால் ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | BPL விலையிலான கோதுமையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இணை உணவு (ஒரு கிலோவுக்கு) | சந்தை மதிப்பிலான கோதுமையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இணை உணவு (ஒரு கிலோவுக்கு) | கொள்முதல் செய்வதற்காக அளிக்கப்பட்ட மொத்த இணை உணவு அளவு(மெட்ரிக் டன்னில்) |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் ராசி நியூட்ரி புட்ஸ், அத்தனூர், நாமக்கல் மாவட்டம். | ரூ.36.25* | ரூ.39.50* | 73980 (75%) |
| 2 | திருவாளர்கள் கிரிஸ்டி ஃபிரைட்கிராம் இன்டஸ்டிரீஸ், ஆண்டிப்பாளையம், திருசெங்கோடு, நாமக்கல் மாவட்டம். | ரூ.36.25* | ரூ.39.50* | 24660 (25%) |

(*மேற்கண்ட விலைகள் ரூ.1700/- போக்குவரத்து செலவினம் உள்ளிட்டதாகும். விற்பனை வரி மற்றும் இதர வரிகள் தனி.)

6. மேற்கண்ட ஒப்பந்தம் 2010 மே மாதம் முதல் 2013 ஏப்ரல் மாதம் முடிய நடைமுறையில் இருக்கும் என்றும், ஒப்பந்தப்புள்ளிகளின்படி தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து இணை உணவு கொள்முதல் செய்வதற்கான செலவு ஒரு மெட்ரிக் டன்னுக்கு சந்தை விலையில் விற்பனை செய்யப்படும் கோதுமையை பெற்று பயன்படுத்தினால் ரூ.39,500/- ஆகவும், வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களுக்கு விநியோகிக்கப்படும் விலையில் (BPL Rate), கோதுமையை பெற்று இணை உணவு தயாரிக்கப் பயன்படுத்தினால் ரூ.36,250/- ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசாணை (நிலை) எண். 146, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 16.10.2006-ன்படி இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் இணை உணவிற்கு அச்சங்கங்கள் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களுக்கு விநியோகிக்கப்படும் விலையில் (BPL rate) கோதுமையை பெற்று, இணை உணவு தயாரித்தாலும்கூட, அவர்களிடமிருந்து பெறப்படும் இணை உணவிற்கும் சந்தை விலையில் கோதுமையைப் பயன்படுத்தினால் வழங்க வேண்டிய விலையான ரூ.39,500/- என்ற விலையை வழங்கவேண்டும் என்றும், ஆகஸ்டு 2010 முதல் மேற்படி கூட்டுறவு சங்கங்களிடமிருந்து 3860 மெட்ரிக் டன் இணை உணவு பெறப்படுவதாகவும், மீதமுள்ள இணை உணவு தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது என்றும்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர் தெரிவித்துள்ளார்.

7. மேற்படி ஒப்பந்தத்தின்படி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் இணை உணவின் கொள்முதல் விலை மெட்ரிக் டன்னுக்கு ரூ.30,900/– லிருந்து ரூ.39,500/– ஆக அதிகரித்துள்ளது என்றும், மேலும் தற்போது, 2010-ஆம் ஆண்டில் 4006 புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளதால், இணை உணவு பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 17,04,711லிருந்து 17,62,120 ஆக அதிகரித்துள்ளது என்றும், முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது இணை உணவிற்கான கொள்முதல் விலை அதிகரித்துள்ளது என்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர் தெரிவித்துள்ளார்.

8. மேலும், ஆகஸ்ட் 2010 வரையிலான காலத்தில் இணை உணவு வழங்குவதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் மற்றும் செப்டம்பர் 2010 முதல் மார்ச் 2011 முடிய ஆகக்கூடிய உத்தேச செலவினம் ஆகியவற்றின் அடிப்படையில், 2010–2011 ஆம் நிதியாண்டிற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு இணை உணவு வழங்குவதற்கு ரூ.277.77 கோடி செலவினம் ஏற்படும் என்றும், இத்தொகையில் 2010–2011ஆம் நிதியாண்டின் வரவு–செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.190.00 கோடி போக மீதமுள்ள ரூ.87.77 கோடியை கூடுதலாக ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார்.

9. முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையரின் கருத்துருவை, கவனமுடன் பரிசீலினை செய்த அரசு, ஜனவரி 2010 முதல் ஆகஸ்ட் 2010 வரை உள்ளபடியே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க கொள்முதல் செய்யப்பட்ட இணை உணவின் அளவினைக் கருத்தில் கொண்டு, அதனடிப்படையில் செப்டம்பர் 2010 முதல் மார்ச் 2011 வரை 5900 மெட்ரிக் டன் இணை உணவு தேவைப்படும் என கணக்கீடு செய்து, ஜனவரி 2011 முதல் மார்ச் 2011 வரையிலான காலத்திற்கு கொள்முதல் செய்யப்படும் இணை உணவின் அளவில் 90% தொகைக்கானப் பட்டியலே நேர் செய்யப்பட உள்ளதாலும், மீதமுள்ள 10% தொகை இணை உணவின் ஆய்வகத்தரச்சான்று பெறப்பட்டதும் நேர் செய்யப்பட உள்ளதாலும், ஜனவரி 2011 முதல் மார்ச் 2011 வரையிலான காலத்திற்கு மேலே கண்டுள்ள 5900 மெட்ரிக் டன்னில் 90% ஆன 5310 மெட்ரிக் டன் இணை உணவிற்கான தொகையை கணக்கில் கொள்ளலாம் என்றும், மேற்படி 5900 மெட்ரிக் டன் இணை உணவில் 25 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் மூலம் மாதந்தோறும் கொள்முதல் செய்யப்படும் 3860 மெட்ரிக் டன் இணை உணவிற்கு அரசு ஆணை எண்.146, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 16.10.2006ல், தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி ஒரு டன்னிற்கு ரூ.39500/– என்ற விலையிலும், தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து மாதந்தோறும் பெறப்படும் இணை உணவின் சராசரி அளவான 2040 மெட்ரிக் டன்னுக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.36,250/– என்ற விலையிலும் கணக்கிட்டு, அதன்படி 2010–2011ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க, 2010–2011ம் ஆண்டின், வரவு – செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள

ரூ.190.00 கோடி போக, கூடுதலாக ரூ.80.48 கோடி(ரூபாய் எண்பது கோடியே நாற்பத்து எட்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு மற்றும் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

10. மேலே பத்தி 9ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 2236–சத்துணவு 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் –101 – சிறப்புச் சத்துணவுத் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – JN தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் நிலை 3 – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் 09 ஏனையவை (த.தொ.கு. : 2236 – 02 – 101 – JN – 6792) | ரூ.56.34 கோடி |
| 2236–சத்துணவு 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் - 789 ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JD. சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப் பணி நிலை 3 – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் 09 ஏனையவை (த.தொ.கு:2236-02-789-JD-6796) | ரூ. 24.14 கோடி |
| மொத்தம் | ரூ. 80.48 கோடி |

11. மேலே பத்தி 9ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான கூடுதல் செலவினம் ரூ.80.48 கோடி ஒரு “புது துணைப்பணி” குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ.I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொ.ச) துறைக்கு அனுப்பி வைக்குமாறும், மேற்கண்ட செலவினத்தை மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி மேற்கொள்ளுமாறும், இக்கூடுதல் செலவினத்தை 2010–11ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்துருவை தக்க சமயத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறும், மேற்கண்ட செலவினத்தில் மத்திய அரசின் பங்கான 50% நிதியை மத்திய அரசிடமிருந்து பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.75243/2010, நாள் 03.01.2011 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1702 (ஆயிரத்து எழுநூற்று இரண்டு) ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/ சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை-113
மாநில கணக்காயர்,
சென்னை-18 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,
சென்னை-35
செயலாளர்,
மகளிர் மற்றும் குழந்தைகள்
நல மேம்பாட்டுஅமைச்சகம்,
இந்திய அரசு, சாஸ்திரி பவன்,
புது டெல்லி 110 001.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை –9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர்
சென்னை – 9.
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்
சென்னை – 9.
நிதி (சந) (வ.செ.பொ I மற்றும் II) துறை,
சென்னை – 9.
உதிரி/ இருப்பு கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

11.1.2011
பிரிவு அலுவலர்.